
வானம்
விழுந்த
நெல்வயல்
கை. சரவணன்
கைசன்

உள்ளதை உணர்ந்தபடி
எழுதுங்கள்!
வெற்றி உங்களதே!

அன்புநிலைமாறாத்
கைசரவணன்

வானம்

வி

ழு

ந்

து

நெல் யயல்

கை. சரவணன்
அளவெட்டி மத்தி,
அளவெட்டி,
யாழ்ப்பாணம்.

கை. சரவணன்

கைசன்

14/12/2014
நாவலர் விழா

வானம் விழுந்த நெல் வயல்
கவிதைகள்

ஆசிரியர்	:	கை. சரவணன்
பதிப்பு	:	புரட்டாதி 2012
உரிமை	:	ஆசிரியர்
அளவு	:	A5
தாள்	:	80 gsm
பக்கங்கள்	:	vi + 78
வெளியீடு	:	கைசன் வெளியீட்டகம், அளவெட்டி மத்தி, அளவெட்டி, யாழ்ப்பாணம்.
பதிப்பு	:	கரிகணன் பிறிண்டேர்ஸ் இல. 424, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

Vaanam Vizhuntha Nelwayal
Poems

Author	:	K. Saravanan
Publish	:	September 2012
Rights	:	Author
Size	:	A5
Paper	:	80 gsm
Pages	:	vi + 78
Published by	:	Kaisan Publication, Alaveddy Centre, Alaveddy, Jaffna.
E-mail	:	kailainathansaravanan@yahoo.com
Printers	:	Harikanan Printers No. 424, K.K.S Road, Jaffna.
ISBN	:	978-955-54659-0-8

விலை: ரூபா 200

ப

டை

ய

ல்...

கருக்கப்பட்ட நிலம் பிளந்து
வீரியம் கொண்டு
வேர் துளிர்க்கும்
என்னை எனக்குணர்த்திய
வன்னிமண்ணிற்கும்....
மைந்தருக்கும்....

வயலுக்குள்...

01.	வரம்பிலிருந்து....	01
02.	துமுக்கியின் திசைமுள்	05
03.	மூடிமறைப்பு	06
04.	அகாலப்போதனை	07
05.	தாமரைக் கிழங்கு....	09
06.	அலைந்தழிந்த இரங்கல்...	10
07.	நாய்களின் குரைப்புப் பற்றிய...	12
08.	மௌனத்தின் காவலும்....	15
09.	விசப்பூச்சிகளின்....	17
10.	2009 வெற்றியின்....	19
11.	உன்னையும் என்னையும்	21
12.	அந்தரித்தலையும் வார்த்தைகளும்....	24
13.	வெறிதாகிப்போயின	26
14.	பேசப்பொருள்....	28
15.	வாழ்வின் குறிப்புக்கள்	29
16.	இரவுநேரத்து தனித்த....	32
17.	கடை: கடைத்தெரு....	34
18.	ஊழையின் உழைச்சல்	36
19.	சங்கடமான இரங்கல் குறிப்பு	38
20.	சிரிப்பு வரும் சாவு...	40
21.	கொக்கு நண்பன்..	42
22.	எங்கள் அழகிய	44
23.	நன்னாட்டுச் சிறப்பு	47
24.	கழுதைக் கச்சேரி...	50
25.	நாட்குறிப்பு	52
26.	உயிர்ச்சத்திரம்	54
27.	நினைவுக் கருக்கு...	56
28.	அலுத்துவடியும் மனசு	58
29.	எனது சாக்குறிப்பு	60
30.	மண்புழு பாம்பு....	62
31.	ஆடுமேயும் எனது கல்லறை...	64
32.	அசையாப்பொழுது	66
33.	காலக்குதிப்பு	68
34.	இருளர்களின் கதை	70
35.	வானம் விழுந்த நெல்வயல்	73
36.	என் சிதையின் குறிப்புக்கள்	75

வரம்பிலிருந்து...

வாருங்கள். வானம் விழுமா? அதுவும் சரியாக நெல் வயலுக்குள் விழுமா?? விழுந்திருக்கிறது அல்லது விழவைத்திருக்கிறேன் அல்லது அப்படி எண்ணியிருக்கிறேன். அதையே நம்பவைத்திருக்கிறேன் அல்லது ஏமாற்றியிருக்கிறேன் என்று நம்புகிறேன் என்றெல்லாம் சொல்லித் தப்பிக்கொள்ள முற்படவில்லை. அதற்கான அவசியமுமேதுமில்லை.

நம்புவது நம்பாதது ஏற்றுக்கொள்வது, ஏற்றுக்கொள்ளாதது, மறுதலிப்பது நிராகரிப்பது, போற்றுவது, தூற்றுவது எதையாவது யாரும் செய்து கொள்ளட்டும் என விட்டுவிட முடிகிற மனது– அது அவ்வப்போது தன்னைத் தேற்றிக்கொள்ளவும் திருப்திப்படுத்திக் கொள்ளவும் உகுத்ததைத் தொகுத்ததே இந்தத் தொகுப்பு. தனது இரசனை, தனது கோபம், தனது நியாயம், என்று தனதேயான போக்கில் தனக்காகவே பிறப்பித்துக்கொண்ட இவை உங்களுக்குரியதாகவும் இருக்கலாம். பிறரது இரசனைக்கு உட்படாமற் போகக்கூடும் என ஒருபோதுமே அச்சப்பட்டதில்லை. ஏனெனில் இரசனை, சனரஞ்சகம், துதிபாடுதல், முதுகுசொறிதல் போன்றவற்றால் எமது சமூகம் சீர்கெட்டுப் போவது உணரமுடிந்திருக்கிறது. ஒருவனைத் துதிபாடுவதற்காகவே பிறிதொருவனை இகழவும், மறுதலையாகவும் உள்ளமை கண்டு கொதிக்கவும் பரிகசிக்கவும் முடிந்திருக்கிறது. தனிமனிதமுகம், பதவி, அதிகாரம் எனும் முத்திரைகளாலான சட்டகத்துக்கூடான படைப்புகளின் நோக்குநிலைக் கேலிக்கூத்துகளாலும் இடம்நிரப்ப வேண்டிய ஊடக பொருளாதார நெருக்கடிகளாலும் ஆர்வக்கோளாறுகளின் அவசரங்களாலும் வயிற்றை நிரப்பும் சில தயாரிப்பாளர்களாலும் இன்றைய கலை நீர்த்துப்போகிற (குறிப்பாக வடபுல) இலக்கியப் போக்கு உங்களால் உணரப்படக்கூடியதே. உணரமுடிகிறதா?

கை. சரவணன்

கை.சரவணன் எனுமொரு தனிமனிதனின் பார்வையின் பதிவுகள் உங்களை உரசுமெனில், நெருடுமெனில் அல்லது உங்கள் உணர்வுகளில் (உணர்ச்சிகளில் அல்ல) ஏதேனுமொரு உறுத்துதலை அல்லது சிறிதாயாயினுமொரு அதிர்வை ஏற்படுத்துமாயின் அது எனக்கான வெற்றியே. உண்மை கலைத்துவத்துடன் கைகோர்த்து வந்திருக்கிறது என்று நீங்கள் உணரமுடிந்தால் சொல்லுங்கள் பெருமைப்படுவேன்.

மேலும் கருவிலேயே கலைக்கப்பட்ட எனது முதற்சிசு பற்றியும் குறிப்பிட்டேயாக வேண்டியிருக்கிறது. அது வந்திருக்கவேண்டிய என் முதல் தொகுதி. எனது மிதிவண்டிக் காலம். அறுபது கவிதைகளுடன் அச்சுக்குத் தயாராயிருந்தபோது அத்தொகுதிக்கான முழுமையுமாயிருந்த உடன்பிறவா அண்ணன் ஊடகர் பு.சத்தியமூர்த்தியின் உயிர்குடித்த அதேயுத்தம் அம்முயற்சிக்கான முழு உந்துதலுமாயிருந்த கவிஞர் புதுவை இரத்தினதுரையை மறைத்த அதேயுத்தம் வெளிவரத் தயாராயிருந்த அத்தொகுதியை மட்டுமல்ல கையிலிருந்த அத்தனை படைப்புகளையுமே அள்ளித்தின்று தீர்த்துவிட்டது. எஞ்சி என்னிடம் மீதமிருந்தது உயிர் ஒன்று மட்டும்தான். அதை வைத்துக்கொண்டு புறப்பட்டாயிற்று மீண்டும் புதுமிடுக்கோடு.

"இந்தச் சமூக அமைப்பில் கலைகள் இலக்கியம் இலாப நோக்கம் கொண்ட வியாபாரக் கலைகளாகவே இடம்பெறுகின்றன. இவை படைப்பு என்பதாக அல்லாமல் உற்பத்திகள் என்ற தரத்திலேயே வழங்கப்படு கின்றன. எனவே சுதந்திரமான உண்மைக் கலைப்படைப்புகளுக்கு இச்சமூக அமைப்பு எதிரானது. தன்னையிழந்து அன்னியமாக்கப்பட்டவனாக இந்தச் சமூக அமைப்பில் மனிதன் வாழ்கிறான். அவனுக்காக முதலாளித்துவம் மக்கள் ரசனை, ஜனரஞ்சகக்கலை என்றபெயரில் போலிக் கலை இலக்கியங்களைப் புனைந்து கொடுக்கிறது. கனவுகளை வியாபாரம் செய்கிறது. அன்னியமாக்கப்பட்ட இப்போலிக்கலைகளைப் புசிக்கிற மனிதனுக்கு உண்மையான கலைஇலக்கியங்கள் எட்டுவதில்லை....." (உ.சேரன் "மரணத்துள் வாழ்வோம்" முன்னுரையிலிருந்து.) எனும் குற்றச்சாட்டிலிருந்து நான் தப்பித்துக் கொண்டுள்ளேன் என நம்புகிறேன்.

கலை கலைக்காகவே என்ற கட்டிறுக்கமோ கலை பாமரனுக்கானதே என்ற மிகமலிந்த நிலையிலோ இன்றிப் பார்த்தது, கேட்டது, அறிந்தது, என்பவற்றின் உணர்நிலைப்பட்ட ஒருநிலையில் நின்று படைத்தவற்றினது தொகுதியே இது. எதையும் புதிய கோணத்தில் பார்க்கிற, பார்க்கிறதைச் சுவைபடச் சொல்கிற பக்குவம் இருப்பதாக நம்புகிற ஒருவனாக இருந்து இக்கவிதைகளை எழுதினேன் எனச்சொல்வது அதிகப்பிரசங்கித் தனமானதாக இருக்கலாம். ஆனால் அதுதான் உண்மை. திட்டமிட்டு நேரமொதுக்கி அமர்ந்து எழுதுகிற பழக்கமோ எழுதியதை மீள்பரிசீலித்து திருத்தியமைக்கிற பழக்கமோ இல்லாததால் பலகருக்கள் இறுதிவடிவம் பெறாமலேயே போய்விட்டன. விழாக்கள், பண்டிகைகள், சிறப்பிதழ்கள், போட்டிகள் என்பனவற்றிற்காக கவிதைகளைத் தயாரிப்பதில் உடன் பாடில்லை. வரையறை செய்துகொண்டு சுதந்திரமாக இயங்குவது முடியாத ஒன்று. ஆனால் பலரும் தம்மைச் சூழவும் சுவரெழுப்பிக் கொண்டு அதன் மறைவுக்குள் மிகவசதியாக இருந்துகொண்டு தமது படைப்புகளின் வீச்சுப் பற்றி மார்தட்டும் போது சிரிக்கிற பக்குவம் இப்போது கைவந்திருக்கிறது.

இவ்வகையில் எனக்கான உந்துசக்தியாக இருந்தவர்கள் இருப்பவர்கள் சிலரே. இளமை நாட்களில் என்னை நெறிப்படுத்திய ஆசிரியைகள் செல்லம்மாரீச்சர், பவளம்ரீச்சர் ஆசிரியர் ஓவியர் பொன்னம்பலம் மறக்கமுடியாதவர்கள். கூடவே பயணித்தும் முகத்துக்கு நேராய் விமர்சித்தும் என்னைச் செழுமை செய்தவர்கள் இவர்களே. கருணை ரவி, ஊடகன் பு. சத்தியமூர்த்தி, இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன், இராதேயன், முல்லைக்கமல், ந. மயூரரூபன், ஆவரங்கால் சுதன், வேலணையூர் சுரேஸ், ஆதிலட்சுமி சிவகுமார், அரசண்ணா, மாமனிதர் பொன். கணேசமூர்த்தி, கவிஞர் புதுவை இரத்தினதுரை, வளநாடன், வி.பி.ஜோசவ். தி.உதயசூரியன், எழுகலை இலக்கியப் பேரவை நண்பர்கள். இல்லாமற் போனவர்களுக்காய் தலை சாய்த்து இருப்பவர்கள் தோள்பற்றிக் கொள்கிறேன் உரிமையான நன்றிகளோடு.

என்னைப் பிறரறியும் வகைசெய்த ஈழநாடு வாரமலர், மாதமலர், நமது ஈழநாடு, ஈழநாதம். வெள்ளிநாதம், தினக்குரல் ஏடுகள், கலைமுகம்.

கை. சரவணன்

வெளிச்சம், வானோசை, விளக்கு, மூன்றாவது மனிதன், எரிமலை, காற்றுவெளி இணையம் பருவஇதழ்கள் பி.பி.சி.தமிழோசை, புலிகளின் குரல் வானொலிகள் என்றும் நன்றிக்குரியோரே.

எழுதுகிற உந்துதலையும் வேகத்தையும் என்றுமே சிதைத்தறியாத பெற்றோர், துணையாள், பிள்ளைகள் இத் தொகுதிக்கான இரகசியமனவர்கள். நன்றி சொல்வது அன்னியமாக்கிவிடும்.

இத்தொகுதியின் வேலைகளை தன்வேலை போலவே தன்தலையிற் சுமக்கிற என்னைப் போலவே ஒருவிதமானவரான நண்பன் ந.மயூரரூபன், கரிகணன் இயக்குனர்–நண்பர் ராஜ், பணியாளர்கள் கரம்பற்றிக் கொள்கிறேன் பெருநன்றிகளோடு.

ஆறியமர்ந்து வயலுள் விழுந்த வானத்தை நெல்வயலோடிச் சுவைக்க வருகின்ற உறவுகளே! நன்றிகள். உங்கள் விமர்சன உந்துதல் மேலும் என்னை எழுதத்தூண்டும். மீண்டும் ஒரு படைப்புடன் உங்களை இயலுமான விரைவில் சந்திக்கும்வரை அன்புகலந்த நன்றிகளுடன் விடைபெறும்.

kailainathansaravanan@yahoo.com
0773461258

என்றும் உங்கள் அன்பன்
கை.சரவணன்.
அளவெட்டி மத்தி,
அளவெட்டி.

துமுக்கியின் திசைமுள்

நிலவு உடைந்து போய்
அழுது வடிந்து உறைந்தது
ஆள்காட்டியின் அழுகையூடு இயைந்தவாறு.

எங்களின் ஊரின் முகாரி
மரங்கள் எல்லாம்
தொங்கிற்று இலையோடு இலையாக
கிளைக்குப் பாரமாயிற்று.

சருகுகள் தேங்கிய தெருவெல்லாம்
சாவின் வாடையைக் கிளர்த்தி
சுடுகாட்டைப் படமாக்கி
இதயத்தில் ஆணி அறைந்தது.

எட்டவான வேட்டோசைகள்
ஒன்றிரண்டு தவிர
சூனியத்தில் திசைபகர ஏதுமற்று
கனத்த காலடிகள்
சருகுகளையும்
சிறு சுள்ளிகளையும்
நசித்து பிசாசுகள் தூசணையோடு
உலவுகின்றன,
பிறமொழிகளைத் தெளித்தபடி
காற்றினைக் கறைப்படுத்தி...

2000
மூன்றாவது மனிதன் 2001

கை. சரவணன்

மூடிமறைப்பு

உண்மையான
வாயிலிருந்தான வருகை
சத்தியமாயிருந்தது.
அது தனதேயான ஒப்பனையற்றதான
வார்த்தைகளைப் பேசிற்று
பொய்களின் பூச்சுக்களின்றி.

வார்த்தைகள் போலவே
அப்பட்டமாயிருந்தது குழந்தை.

திறந்திருந்தது மறைப்புகளற்று
உண்மையாய் குறிகளுடன்
உடலான குழந்தை.

பொத்தி மறைத்து
பதுக்கி ஒளித்து
இரத்த பந்தமொழிந்து தொலைந்து
பெயர் சூடிற்று ஆடைகளோடு.

அது கேட்டிருக்கவில்லை.
கேட்கவேயில்லை.
தேவையுமில்லை
ஆடைகள் பெயர்.

எல்லாமே மறைப்பதாயின.
மறைவதாயின
உண்மைகள் யாவும்.

உண்மைகள் வெளிப்படுவது,
எல்லோருக்கும் எல்லாம் தெரிவது,
எவருக்கும் எவருக்குமே
உடன்பாடாயில்லை..

2001
மூன்றாவது மனிதன் 2001

அகாலப் போதனை

ஒளியை உணர்த்துவது
இருட்டின் கருமைக்கறுப்பு.
ஒளியும் இருட்டும்
ஒன்றென்பதை உணரமறுக்கும்
மனதுக்கு எதிலும் அக்கறைப்பட
நேரமிருப்பதில்லை.

பொய்யைப் பொய்யே
காட்டும் என்பது
பொய்யை உண்மைதான்
வெளிப்படுத்துவதாக படினப்பட்ட
மனதுக்கு சிந்திக்க
முடிவதில்லை.

சிறகு விரித்த சிட்டுக் குருவிக்கு
வானத்தின் நீளத்தில்
எள்ளளவும் கரிசனைப்பட முடியாததை
எப்படி ஊகிக்க முடியும் எமது
அவசரப் பொழுதுகளில்?

நடு இரவில் நடு வீதியில்
வாகனப் பாய்ச்சொளியில்
கண் கொடுத்து முறைக்கும் தூக்கம் கலைந்த
சொறிநாய் வாகனத்தைத் திட்டுவதை
பயணவிரைவு ஊகிக்க
ஒருபோதுமே விடுவதில்லை.

ஆடைகள் அம்மணத்தை விட
அதிகம் ஊகங்களைப் பிரசவித்துக்
குமைக்கும் என்பதுகூட
பலருக்கும் பலபோதுகளிலும்
விரசமாய்ப் படலாம் நிதானித்தமர்ந்து
ஆராய நேரமிருப்பதில்லை.

கை. சரவணன்

சதைகளின் தேவையைக்
காதலென்று கறைப்படுத்தப்படுவது
கவலையற்றுப் போகலாம்–
பருவங்களின் சீண்டல்களுக்கு
உண்மையை உணர்த்த
வலுவிருப்பதில்லை.

கிழக்கும் மேற்கும் ஒன்று.
வடக்கும் தெற்கும் ஒன்று.
உருண்டையுலகில் சாத்தியப்படும் இது
என்று தீர்வுகாண அடைசலாக்கிய
பாடத்திட்டம் இடம்
தருவதேயில்லை.

இவையிவை இவ்வாறிருக்க
போரும் சமாதானமும்
ஒன்றென
கூறப்போவதை
அனேகரின் அறிதல் குறைபாடு
ஏற்றுக்கொள்ள விடுவதில்லை.

உணர்வதும் உணர்த்துவதும்
வேறுவேறானது
இயல்பும் தூண்டலும்தான்
இரண்டாய்ப் பகுக்க நினைக்கவே
குறுகிய பார்வை
அனுமதிப்பதில்லை.

2003
கலைமுகம் 14-01

தாமரைக் கிழங்கு:
தாவும் தவளைக் குஞ்சு..

தாவித் தாவிக் குதிக்கும்
தவளைக் குஞ்சு மனது
என்னவென்று புரியாது குழம்பி.
சுடுமணற் பரப்பெல்லாம்
சிறுவிரற் தடம் வரைந்து
ஒரு சிறு காற்றின்
தழுவற் பொழுது வரை நிலைக்க.

கருமுகில் கவிய
குளிர்மை பூசும் காற்றின் பின்
துளிர்விடும் தூற்றலிற்கான
ஏக்கம் படர
குளத்தின் பரப்பு முதுமையடைந்து
சுருக்கமடைந்திருக்கும்.
கண்டபின்
முகம் சுண்டிக் காய்ந்து
விழியுருள வாய்வரள
தாவுறும் தொடர்ந்து.

பசுமையின் எதிர்வு கூறலை
இன்னும் கூறியபடி உடலைச் சுருக்கி
உறங்கப் போகிறது
தாமரைக் கிழங்கு
நம்பிக்கை துளிர்க்கும் விதமாய்.

2004
வெளிச்சம் 100ஆவது இதழ்

கை. சரவணன்

அலைந்தழிந்து போன இரங்கல்கடிதம்

எனது சிலுவையை
நானாயே விரும்பித் தோளேற்றி
சுமந்து கொண்டிருக்கிறேன்.

எனது உடல்
எனது மனம் போலவே
முழுமையும் என்னிடத்தில்.
அனுதாபம் என்ற
வார்த்தைகளைப் பொருத்திய
நண்பனில் ஏளனமே மணத்தது
பெரிதாக நாறி.

அவனது மூளையை
உயரிக் கிளையில் வைத்து
காகம் கொத்திக்கொண்டும்
காலடிக் கிளையில் அலகு
துடைத்தபடியாயும் இருந்தது.
நாக்கினை அறணை
நக்கிக்கொண்டிருந்தது.
வயிற்றினை
அடங்காப் பசி மீறிய
யானை கொண்டு போயிற்று.
இரவலாக மட்டும்
என்றான் நண்பன்.
அவனது கைகளால்
குரங்கு சொறிந்து கொண்டது
முதுகு–தலை–கை–கால்
எங்குமாக மாறி மாறி.

வேகமூட்டவென
நத்தைகள் கால்களை
ஊர்ந்து கொண்டிருந்தன.
கண்களில்
வௌவால்கள் குடிகொள்ள
வாடகைக்கு எடுத்திருந்தன.
மீந்துபோன தனது பகுதிகளை
பதுக்கியிருந்தான்
பாம்புப் புற்றிலோ அல்லது
வேறெங்காகிலுமோ.

இதுபற்றியும்
இவை பற்றியும் அவன் ஏதும்
பேசவில்லை.
பிரயத்தனமெடுக்கவுமில்லை.

நானாயே விரும்பித்
தோளில் ஏற்றுக்கொண்ட
சிலுவையினது கனம் பற்றி
பஞ்சினது பொறாமை கொண்ட
வார்த்தைகளில்
நண்பனுக்குச் சுவறிவிட முடியவில்லை.

இரங்கல் தெரிவித்துக் கொள்வதாக
மட்டும் அடிக்கடி
என்மேல் வார்த்தையாடினான்.
அதிலெல்லாம் அவனது
ஏளனமே மணத்தது நாறியபடி.
ஆனால் பாவம்
தன்னை விடவும்
என்னையே அதிகமாக
நேசிக்க முடிந்தது.
அவ்வளவே அவன்.

2005.
வெளிச்சம் 2005.

கை. சரவணன்

நாய்களின் குரைப்பு பற்றிய குறிப்புகள்...

நாய்களின் குரைப்புகள்
நீளநீள
நித்திரை எழுந்து மூலையில்
முதுகு சாய்த்திருக்கிறது.

மூச்சு விடாமல்
நாய்கள் ஏதோ சொல்கின்றன.
ஊர் முழுதும் கூடிய
ஒற்றுமை ஒலித்தது.
ஊரில் வளவுகள் மதில்கள்
ஊடான பாதையில்
ஒலித்து வரும் அவற்றின் குரல்களிற்கு
விளக்கம் என்ன??

"நை... ..நை"என
நச்சரிப்பதான குரைப்பும்
இலக்கு நோக்கிய
குவியும் ஒலியுமானது
விலங்கினம் ஏதாலுமொன்றிற்காக
இருக்கும் என்பது
பட்டறிவு.
"ஊ"என்றஇழுப்பும்
துண்டு துண்டாய்
அலைந்த குரைப்பும்

பேய்: பிசாசு முனிகளுக்கானது
என்பது பாட்டியின் பாடம்.

பேய் முனி பிசாசு பற்றிய
காற்சட்டை நனைந்த
நினைவுகளின் ஈரம்
இப்போதும் காயவில்லை.
அறிவியல் எதைச் சொல்லினும்
அடிமனதில் ஒரு
திடுக்கென்ற பதிவு
இன்னமும் நடக்கிறது.

பூரணை நிலவுநனைந்த வீதிகளில்
கூட்டம் போடும்
நசிந்த குரைப்பு
கலவிப் போட்டிக்கானதென
உணர முடிகிற பருவத்தில்
ஊரில் இரவுகள் உறங்கிப் போனது.
பகல்களும் சிலவேளை
தூக்கத்தில் கிடந்ததுண்டு.

இன்றைய குரைப்புப் பற்றியும்
அடிக்கடி நினைக்கலாம்.

வீதியோர கற்கள்
இடறும் சிற்றொலியும்
வேலியில் கறையான் ஊரும்
சரசரப்பும் இணைந்த
இன்றைய நாய்க்குரைப்பு
பற்றியதாக
ஏதேனும் விபரிக்கலாம்.

கை. சரவணன்

பூட்டிய கதவுகளின் உள்ளே
புழுங்கிய படியே
விழித்திருந்து விடிய விடிய
நிறைய ஊகிக்க முடிகிறது.

என்றாலும்–
எனது ஊகம் பற்றி
உன்னுடைய காதினுள்ளே
விபரிப்பதைக்கூட
நான் விரும்பவில்லை.

நாய்கள் இரவு முழுவதும்
ஓடியோடி வளவுக்குள்
நின்றபடியே
நன்றாகக் குரைக்கட்டும்.
அவைக்கு அதற்கான
முழுஉரிமையும் உண்டு.
சுதந்திரமும் நிறைய உண்டு.

எனது வளவு நாய்
எனது வளவுள் நின்று
குரைக்க முடியாத பொழுதுகள்
இருக்குமாயின்
அதுபற்றி குறித்துரைக்க
முடியாது போகும்.
நிரந்தரமாயோ தற்காலிகமாயோ
நான் குறித்துரைக்கவும்
விடிய விடிய யோசிக்கவும்
முடியாது போனாலும்
நாய்கள் ஓய்ந்து
இரவுகளில் உறங்க முடிவது
எப்போது..?..?..?

12-05-2010.

மௌனத்தின் காவலும் புதைந்துள்ள உண்மைகளும்...?

தன்பாட்டில் எதையெதையோ
சொல்லிப் புலம்புகிற காற்று.
இலைகள் தமக்குள்
குசுகுசுக்கின்றபோது
தழையில் அதுவரை மறைந்திருந்த
குயில் எழுந்து பறக்கிறது.
பாடல் அறுந்து போகிறது.

முன்னைப் போலவே
பயண நீளத்தை
வார்த்தைகளால் செப்பனிடலாம்.
விழித்திருக்க விடியும் இரவுகளை
விவாதங்களால் இணைக்கலாம்.
என்றாலும்
பயண நீளமும்.
விழித்த இரவுகளும்
முன்னர் இருந்ததான
நினைவுகள் மீளமீளவரும்.
நரமாமிசபட்சணிகளால்
ஊரும் நகரமும்
நெரிபட்டுக் கொள்கிறது.

கை. சரவணன்

வீதியோரம் குருதி வார்ப்பது
தாகசாந்திக்கானதாக இருக்கிறது.

சன நடமாட்டம்
இருக்கிறபோதே தன் கதவுக்குத்
தாழ்ப்பாழிடும் கடவுளுடன்
ஆறியமர்ந்து பேச முடியவில்லை.
கதவிலிருந்த பூட்டிலிருந்தன வார்த்தைகள்
"பக்தா!
மௌனத்துள்ளேதான்
எல்லா உண்மைகளும் உள்ளன.
பேசாதிருப்பாயாக.
உன்–
பேசா வார்த்தைகள்
உன்கூடவே துணையிருக்கட்டும்"

புதைந்திருக்கும் உண்மை
காவலிருக்கும் மௌனம்
ஒன்றுமே புரியாதிருப்பதும்
நன்றுதான்...

23-05-2010

விசப்பூச்சிகளின் பெருக்கம்!

காற்றின் விரல் புரட்டியது.
வரலாறு சொல்லும் பாட நூல்.
படபடத்து பக்கமொன்றைத் திறந்ததது.

வரிகளில் காற்றுப் படப்பட
மெல்ல உயிர்த்தன வார்த்தைகள்.
உயிர் குடிக்க மறைந்திருக்கும்
கண்ணிகள் போல
விசக் கொடுக்கைத் தூக்கிற்று
ஒரு உயிர் வார்த்தை.
ஒன்று– இரண்டு– மூன்று–.....
முழுதுமாய் உயிர் கொண்டெழுந்துள்ளன.

விசக் கொடுக்கின் நுனியில்
கட்டியிருக்கிறது விசம்.
அதன் நாவிலும்
இருக்கிறது.
நகங்களிலும் இருக்கத்தான் செய்கிறது.
ஒளிக்குக் கூசி கண்கள் குறுகின.

கை. சரவணன்

மகா வம்சத்தாலும்
தம்மபதத்தாலும் உணவூட்டப்பட்ட
வார்த்தைத் தேள்கள்
கண்களை இறுகமூடியபடியும்
நிறைந்த வயிறுகளுடனும்
ஆடிப் பாடின.

புத்தக வார்த்தைகளிலிருந்து
உயிர்க்கப்பட்ட அத்தேள்கள்
ஊரத்தொடங்கி..... .....

07-06-2010

2009 வெற்றியின் ஆய்வறிக்கை 2010...

இமைகளுக்கு வெளியே
அழக்கூட முடியாத வேதனை
தொண்டைக்குழி வரை கூட
ஓலமிட்டு ஓங்கிக் கதற முடியாத் துயரம்
பட்டினி வயிறு சிந்திய
வியர்வைகளின் சிதிலக் குவியல்
மிதிவெடி அபாயம்
என்றான புதிய வாழ்வு
ஏதோ ஒருவாறு நடக்கிறது.

ஓங்கிப்படபடத்துக் கடற்காற்றில்
பறந்தடிக்கும் கொடி,
பச்சை இரத்தமும்–
வேகாத மானுட இறைச்சியும் புசித்த
உப்பிய வயிற்றோடு காட்சிக்கு வரும்
அனைத்துலகினதும் கொலைக்கருவிகள்,
கருவிகள் தாங்கிய காவலரின்
காலணி மினுக்கங்களின் உள்ளாக
நசிபட்ட மலர்களதும் தளிர்களதும் வாசம்.

கை. சரவணன்

காட்சி விரிய விரிய
கண்களும் விரியும் கூட்டத்திற்கு
பட்டாசு வெடிகளும்
பெரகர வாணங்களும்
நவீன அரங்குகளின் வர்ணப்புகைகளும்
மட்டும் பரிச்சயமானவை.
அப்பட்டமானவை.

சக்கர நாற்காலியின் தளத்தை
தொடவும் எட்டாத கால்களுடன் நகர்வது
முழுப்பங்காளியான சிப்பாய் மட்டுமல்ல.....
நெருக்கியடிக்கும் கூட்டத்துள்
இருக்க இடமின்றி நிற்கவும் முடியாமல்
தடுமாறுவது–
காலம் உயிர் குடித்த வீரனின்
முதிய ஏழைத் தாய் மட்டுமல்ல....
குழந்தைகளுக்குச் சுரக்க மறுக்கும் மார்புகளுடனுள்ள
விதவை மனைவி மட்டுமல்ல.....
காசை அனுப்பிய அப்பாவின்
ஆசை முகம் கேட்டு அடம்பிடிக்கும்
சிறுவனோ சிறுமியோ அல்ல.....

வெற்றி.
அப்படியாயின்
யாருக்குச் சோறு போட்டது..?

22-06-2010

உன்னையும் என்னையும் எச்சமாய் விட்ட யுத்தம்

மகே அம்மே!
உயிரோடு இருத்தலே நலம்
எமக்கென்றறிவாய் தாயே!
உன்னிலை அதுகூட
இல்லையென்றானமையை
யாருமே யாருமே
அறிந்தில்லை என்பது
மேலதிக வலிதான் தாயே.
நீ,
நோயாளியாகிக் கால்கை வழங்காத
முதிய உன் கணவன்,
மன்னாரின் முட்புதரிடை
தேசியம் காக்க உயிர் கிழிந்த மூத்தவனின்
மனைவி, மூன்று குழந்தைகள்,
முல்லை வயல் நிலத்து
வாய்க்காலோரம் அரசின் கௌரவத்திற்காய்
உயிர்விறைத்த இளையவனின்
காதல்மனையாள் நான்கு குழந்தைகள்,

கை. சரவணன்

பருவம் கடந்தும் கரையேறாத
உன்னிரு குமர்கள்,
நிலவைப் பொழியும் குடிசை
எல்லோரும் நலந்தானே?
எங்களுக்கு மட்டுமல்ல
உங்களுக்கும் தலைவிதி
இப்படித்தானாகியிருக்க வேண்டுமா??

உனது மகன்களால்
சமைக்கப்பட்ட வெற்றிகளை
ஒட்டுமொத்தமாக எல்லோரும் உண்டு
தமக்குள் கொழுத்துக் கொண்டாடினர்
என நொந்துகொண்டாய்.
இழப்புகளை ஈடுசெய்யும் வலு
எவற்றுக்குமே இல்லை என்பது
பொதுப்படையானதுதான்
எனினும்
யாருக்குப் புரிகிறது இது???
நீயும் நானும்
உகுக்கும் ஒவ்வொரு துளி கண்ணீரும்
எவ்வளவு பெறுமதியானவை?.!

எல்லோராலும் எல்லோராலும்
ஆசீர்வதிக்கப்பட்ட
யுத்தம்
உன்னையும் என்னையும்
ஏன்தான் எச்சமாய் விட்டதோ???

நான்
எதையெதையோ சொல்லிக் கொண்டு
இருக்க இருக்க
உன்மனம்
கோதுமைக்குப் பதறுகிறது.
விடிந்தெழும்பியதும்
அன்றைய முழுநாளுக்குமாக
வெறுந்தேநீரில் தோய்த்துண்டு ஆற
ஒருதுண்டு பாண்
கேட்கப்போகும் உன்னவர்
குரலுக்காய்ப் புலம்புகிறது.
பாணைப்பற்றி
நீயும் நானும் கூடி அங்கலாய்ப்போம்
பஜீரோவின் விலை குறைவுக்காய்
அவர்கள் இன்னொரு விழா
எடுக்காமலா இருக்கப் போகிறார்கள்???

24.06.2010.
07.30.பி.ப.

கை. சரவணன்

அந்தரித்தலையும் வார்த்தைகளும் விறைத்த நினைவுகளும்

அந்தரித்தலைந்த
வார்த்தைகளைப் பொறுக்கி
கூட்டித் தொகுத்துப்
பாடலாக்கினீர்கள்.

பாடல்களின் அதிர்வுகளில்
குயில்கள் கூவும் என்றீர்,
பூக்கள் தினமும் மலருமென்றீர்,
களனிகள் பொலியுமென்றீர்,
கடல் கொழிக்குமென்றீர்,
என்றிந்த என்றீர்களின் பின்னான
நீளக் கருக்களை
கருக்கலைப்பும் செய்தீர்கள்.
நீங்களே பின்னர்
சுகப்பிரசவம் என்றொரு
பிரகடனத்தை
தனித்து முன்மொழிந்தீர்.

ஆட்காட்டிகளும் கேளாத
கோட்டான்களும் பேசாத
இரவின் நீள் வெளிகளில் எல்லாம்
ஒப்புக்கும் ஒருவரி
முகாரியுமிருக்கமுடியாத
பொழுதுகளில்
யதார்த்தத்தின் குரலை
எந்தக் கயிற்றால் சுருக்கிட்டு
அமுக்கப் போகிறீர்கள்?

அந்தரித்தலைந்த
வார்த்தைகளின் பாடல்
கற்குவியலுள் முளைத்தெழும்
நாயுண்ணியின் பிசிர்முட்களால்
கிழிபட்டுச் சிதறி
மீண்டும் திசைதப்பித் தெறிக்க
முட்கம்பி கொண்டு
நிரைப்படுத்துவது எத்தனை நாட்களை
விழுங்கிக் கிடக்கும்?

மலங்கழிக்கும்
சில நிமிடப் பொழுதுகளில்
யார் தலையிலோ முகத்திலோ
விழுமென விறைக்கும் நினைவுகளால்
உங்கள் பாடல்
அறுபடாமல் தொடர்வது பற்றி
ஏதும் எண்ண முடிகிறதா?

அந்தரித்தலைகின்ற வார்த்தைகள்
ஆற ஒரு மரமின்றிய
வனாந்தரத்தில்
தண்ணறுஞ் சோலை பற்றிய
விபரிப்புகளில் வாழும்
உங்கள் கனவுகள்
கலையாதிருப்பதாகுக.

27-06-2010

கை. சரவணன்

வெறிதாகிப்போயின உன் குரலும் என்நினைவும்....!

யாருமற்ற வெறுவெளியில்
உனது குரல்
ஓலமிட்டுக் கரைகிறது.

ஏனுனது ஓலமென
எண்ணிவிட முடியவில்லை
தனிமையின் சுகிப்பில்
நேர்ந்துவிட்ட ஊறுஎன்ன ?

முகில் விழுந்து போகுமென
எண்ணும் உன்
பாச நினைவிற்காய்
நிலவு ஏதும் கூறிற்றா?
மல்லாந்திருந்து
வானம் தாங்குமுன்
மெலிந்த கால்களின் வலு
பற்றிபொறாமை கொண்ட
என் மனது.
யாருமேயற்ற
யாருமே நுழையவொண்ணாப்
பெரு வெளியில் நடந்த
அத்தனையும் உன்
இதயத்தைப் பிழிந்திருக்கும்–
உன் குரல்தவிர
வேறேதும் வெளியேறாத
வெளியின் காவல்
சுருளாக்கப்பட்ட முட்கம்பிகளின்
நம்பிக்கைதான்.

அந்தக் கம்பிகளில்
நம்பிக்கை கொள்.
மென் கால்களினால் எத்தனை
காலத்துக்கு முகிலினைச் சுமப்பாய்?
நிலவை மறைக்கும்
முகில்களுக்கும் தெரியாதபடி
காவலிருக்கும் வேலியில்
நீயெப்படி
அவநம்பிக்கை கொள்ள முடியும்?

கால்களைக் கீழிறக்கி
மடக்கி ஓய்வெடுத்துக்கொள்–
கத்திக் கத்தி
இரத்த வாந்தியெடுத்துச் செத்துப்போவாய்
எனப் பாட்டி சொன்னதை
நான் நம்பவில்லை.

ஆனாலும்
கத்தி ஓலமிடாது
ஓய்வாக ஒரு கண் உறங்கு
எனக் கூறமுடியாத
எனது நிலை
உன்னைப் புரிந்துகொண்ட
என்னை நீயும்
புரிய முயற்சி செய்யலாமே
என
முன்மொழிய மட்டும்
முடிகிறது.

விடியட்டும் .
இருந்தால்
மீதியைப் பே சு வோ ம்.

14-07-2010

கை. சரவணன்

பேசாப் பொருள்!

சுவர்களில் எல்லாம்
படிந்திருக்கிறது சாட்சிகள்
மிகமிக அமைதியாக.

மரங்களின் இலைகளின் கீழே
நரம்புகளில் உறைந்த
ஓலம்–
காற்றில் சலசலத்தும்
ஒரு சொட்டும் விழவில்லை.

வேலிகளின் முள் உடலில்
வலியிருப்பதாக
கிழிந்து கந்தலான காற்று
கதறுவதைப் புழுதி விழுங்குகிறது.
வாளியேதும் நுழைந்தெழாத
பாசிபடர்ந்த கிணறுகளில்
தவளைகள் உரத்து உரத்து
ஏதேதோ பேசுகின்றன.

நானும்..... ....!?

19-07-2010

வாழ்வின் குறிப்புகள்

காட்சி 1

அவர்கள் கூறுவதெல்லாம்
தாம் தாவரபட்சணிகள்.
மறந்தும் அல்லது தெரியாமலாயினும்
மாமிசம் நாடாதார் என்ற
பிரகடனம்.

காட்சி 2

முதலில்
மிகமிக மெதுவாகவும்
இனிமையாகவும் காதுகளில்
முணுமுணுத்தபடி
மெதுவாக காதுகளை உண்பர்.

கை. சரவணன்

பின்
காதுவழி புகுந்து
மூளையை அரித்துண்ணத்
தொடங்கி முடிப்பர்.

நீயோ நீங்களோ
நானோ நாங்களோ
வயிற்றின் பசியை உணரத்
தலைப்படும் பொழுதில்
அவர்களது நாவு
மூளையை முடித்து
கண்களை முடித்து
நாவைச் சுவைத்தபின்
தொண்டை வழியிறங்கி
இதயத்தையும்
நுரையீரல்களையும்
நக்கத்தொடங்கியிருக்கும்.

காட்சி 3

நரமாமிச பட்சணிகளின் கதைகள்
நிறையப் படித்த யாராலும்
இதை நம்ப முடியாது.

ஏனெனில்
தீமூட்டி பறையடித்தாடி
இரைச்சலெழுப்பி
பின் தீயில் சுட்டு
கபாலத்தைக் குடைந்து
குடலை உருவி
தோலைக்கிழித்து
எலும்புகளை முறித்துச் சூப்பி
உள்ளிருக்கும் மச்சை குடித்து....
என்றவாறாக

முன்னர் அறிந்திருந்த
எந்த விதமாயுமின்றி
அவர்கள் உண்ணுவர் என்பதை
நம்பவே முடியாது.

காட்சி 4

முடிவாக
எலும்புகளைக் கடலில் கொட்டலாம்
புதைக்கலாம்
அல்லது பசுமமாக்கலாம்.

எப்படியிருப்பினும்
தேளின் கலவிதான்.
இறுதியில்
எல்லாமே முடிந்து போகும்.

நீயோ நானோ
இருந்தசுவடு பற்றி
யாரும் கவலையுறப் போவதில்லை.

04-08-2010

கை. சரவணன்

இரவு நேரத்துத் தனித்த வினா...?

நெளிந்தும் வளைந்தும்
சரிந்தும் தாழ்ந்தும் உயர்ந்தும்
ஒடுங்கியும் அகன்றும்
தன்பாட்டில் நீளத்துக்கும்
படுத்துறங்கும் தெரு.

நெளிந்தும் வளைந்தும்
சரிந்தும் தாழ்ந்தும் உயர்ந்தும்
ஆடியும் ஆடாமலும்
குலுங்கியும் குலுங்காமலும்
அத்தனித்த நீள்தெருவில்
தனித்துப் போகிறது சரசரத்தும்
மரங்களின் கிளைகளின் இலைகளைச்
சலசலத்தும் சந்தடியே இல்லாமலும்

போகிற காற்றில்
அந்த ஒற்றை வண்டியின்
தனித்த பயணியின் சீட்டியொலி
ஒலித்துக் கொண்டிருக்கிறது.

வானத்து ஒற்றை நிலவு
பாலைப் பொழிகிற பொழுதில்–அதை
வற்றக்குடிக்கும் முகில்கள்
தவழ்கின்றனவா இல்லை
ஊர்கின்றனவா இல்லை
ஓடுகின்றனவா இல்லை
நீந்துகின்றனவா மிதக்கின்றனவா பறக்கின்றனவா
எதைத்தான் செய்கின்றன???

ஒற்றைத்தெருவின்
தனித்த வண்டிப் பயணியின்
சீட்டியில் எழுகின்ற
தனித்த நிலவின் பாலருந்திய
முகில்கள் தொடர்பான
பெரும் ஐயம்
உங்களுக்கும்
இருக்கத்தானே வேண்டும்???

23-08-2010

கை. சரவணன்

கடை: கடைத்தெரு
(ஒரு நாட் குறிப்பு)

காலை மதியமாகி
மாலையாகியுமாச்சு.
வந்தும் பார்த்தும் கிண்டியும்
"அங்காலை ஒருக்காப்
பாத்திட்டு வாறம்....."
வியாபாரம் அவ்வளவுதான்.

கரைத்துத் தெளித்த மஞ்சள்
சாமிக்கு மாலை
ஊதுபத்தி அதைவிடச் சாம்பிராணி
குபேரன் கணக்கு
பிச்சைக்காரன் கணக்கு
மின்சாரக்காரன் தண்ணீர்க்காரன்
சிப்பந்திகள்....
கட்டிட வாடகை
ஒன்றும் தவறவில்லை.

காலையில் வந்து விரித்து
மதியத்தின்மேல்
முழுதும் முடித்து
வெற்றுப் பெட்டிகளையும்
அதிலேயே விட்டுவிட்டு
கையோடிருக்கும்
பையில் திணித்த காசோடு
போயேவிட்டான்.

வாசல் நடையில் கடைவிரித்த
வியாபாரி.
அவனுக்கென்ன?
செலவுகளென்று ஏதுமில்லை.
வந்த வாகனம்
கூடவே வந்த ஒரு எடுபிடி
ஒரு கிழிந்த தரப்பாள்.....

பார்த்தபடியிருந்து
மனம் பொருமத்தான்
முடிகிறது.

இனியென்ன.....?
துருப்பிடித்த கதவை
முழுப்பலமும் கொண்டு
இழுத்து மூடவேண்டும்.
அதற்காகவேனும்
ஆரோக்கியமான பணியாளை
வைத்திருக்க வேண்டும்.

சாமிக்குப் போட்ட மாலை
வாடிப் போய் விட்டது.
சாம்பிராணி மணமும்
இப்போது இல்லை.
குபேரன் மட்டும்
காசுக்கு நடுவில்.....!

02-10-2010

கை. சரவணன்

ஊமையின் உழைச்சல்.!

ஊது குழல்களுக்கு
உயிரில்லை
உணர்வில்லை
ஏற்க முடிகிறதா?
ஊதுவோனின் உழைச்சலை
உரத்துக் கதறுவதுதான்
வேறொன்றுமில்லை.

ஊது குழலின்
ஊழை
காதுவழி புகுந்து
கபாலம் குடைந்து
உயிர்மையத்தை உலுக்கும் என்பதானது
உண்மையிலும் உண்மை.
உணர முடிந்தால்
நல்லதுதான்.

ஊழையில்
ஊதுவோனின் சுவாசம்
மணப்பதும் உண்டென்பர்–
என்றாலும்
நிதானித்து நின்று
வகைப்படுத்தும் வலுயாருக்கு உண்டு?

ஊதுவோனின் சுவாசத்துக்கும்
அப்பாலே தொலைவில்
தொண்டைவழி கசியும் அவனின்
உள்ளத்துத் தெறிப்புகள்

ஊருக்குள்ளே எல்லாம் திரிந்து
அலைந்து அலைகளைத் தாலாட்டி
தூக்கத்தை விரட்டும் என்பதானது
வடக்கும் தெற்கும்
ஒன்றுதானென உணரமுடிகிறவரை
புதிராயே இருக்கும்
இருந்துவிடட்டும்.

குழலின் வாய்வழி
வீணீர் வடியும்.
ஊதுவோன் உள்ளத்து
அழுக்குகளே அனேகமாய்
நாறிக்கொண்டிருக்க
வழிந்து ஒழுகி
வீதியெங்கும்
நாய்விட்டையையும் விடாது
கரைத்துக்கொண்டு
கால்களில் ஒட்டி
உபத்திரவிக்கும்.
காலைத் தேய்த்துக் கழுவிவிட
முடியாதோரே
வீடுகளுக்கும் நாற்றம் பூசி
விடட்டும்
இப்போதும்
அதுதானே
நடந்தேறுகிறது.
யாருக்கு அக்கறையுள்ளது?

சுருதி பிசகாத
குழலின் ஓசைஒன்று
சீராய்
கிடைக்குமெனில்
அதற்காக மன்றாடுவோம்.

17-11-2010

கை. சரவணன்

சங்கடமான இரங்கல் குறிப்பு.

நீ அழைத்தபோது
சங்கடப் பட்டு நான் நெளிந்து
மறுத்த போது
மாறிப்போனது உன் முகம்.

நண்பா?
சாவு வீட்டில் இரங்கலுரை
ஆற்றுவது என்பது
மிகவும் கடினமானது நண்பா!
நீயும் உணர்வாய்?

ஒவ்வொரு மனிதனையும்
அவனது சாதனைக்காக நாம்
புகழ்கையிலே
அவனுள் அவனது சொந்த மனச்சாட்சி
குமுறிக் குமுறிக் குமிழியிட்டுச்
சிரிப்பது பற்றி
எப்போதாயினும்
யோசித்திருப்பாயானால்
என்னை உணர்ந்திருப்பாய்.
செய்வது எல்லாவற்றையும்
செய்து முடித்து
கட்டையாகிக் கிடப்பவனும்
ஒரு மனிதனாய்
வாழ்ந்தவன்தான்.

மனிதனை உனக்கும்
பிடிக்கிறதில்லை
என்னைப்போலவே.
மாறிக்கொண்டிருப்பவன் என்பதால்.

இத்தோடு விட்டுவிடு.
இருக்கும் வரை
வகித்த பட்டியலின் நீளம்
போதும் தானே நண்பா
பண்ணிவைத்தவற்றை எடைபோட...
எத்தனை பேருக்கு உதவி என்பதைவிட
எத்தனை பேரினது பெருமூச்சு என்பது
உன்னால் மணந்தறிய
முடியாததா?

போனான் போகட்டும்.
இருக்கும் வரை இகழவும்–
இல்லாதபோது புகழவும்–
இதையிதைத் தொகுத்து
எல்லோரும் சிரிக்கவும்
இரங்கலுரை ஆற்றுவது
மிக மிகக் கடினமானதுதான்.

02.01.2011

சிரிப்பு வரும் சாவு....

சிரிக்க முடிகிறது.
வாய்விட்டு
மனம் திறந்து
சிரிக்க முடிகிறது.

இறுக்கமேதுமற்ற
காற்றிற் பறக்கிற மனசுக்கு
கவலையென்று ஏதுமில்லை.
ஆசைகளும் ஏதுமேயில்லை.

கிட்டே வந்து முட்டி
போட்டிருந்த
ஆடை குலைத்துப்
போயிருந்தது சாவு முன்பொருநாள்.
வந்து வந்து போயிருக்கிறது
வெறுங்கையோடு பலமுறை.
தோலுக்கு உணர்த்த முடிந்த
சாவுக்கு அதற்குள் கிழித்துப்
புகுந்து உயிர் உறிஞ்ச
வலுவற்ற சந்தர்ப்பங்களை
காலம் இழந்து விட்டிருக்கிறது.

ஒன்றிரண்டு முறைகளல்ல
பல முறைகளை.

தலைமுறைக்கென்று
தேட ஏதுமற்றிருக்கும்
மனசுக்கு
சாவு பற்றி யோசிக்க–
யோசித்துப் பயப்பட
நேரமே இருப்பதில்லை.

கொலைஞனை–
அவனது உயிருறுஞ்சு கருவியை
இக்கூட்டில் வரும் சாவை
நினைக்க நினைக்க
சிரிப்பு வராமலா
இருக்கப்போகிறது..?

02-02-2011

கை. சரவணன்

கொக்கு நண்பன்

பட்ட மரத்தின் கிளையின்
மொட்டுகளின் வெண்ணிருப்பை
உலுப்பி விட்டுக் காற்றில்
கரையுமொரு ஒலிக்கீறல்...

மொட்டுகள் மலர்ந்து
உடனிதழ் களர்கின்ற மலர்கள்–
காற்றில் சிதறும் இதழ்கள்.
கருவானக் கீழே
கொக்குகளின் பறப்புகள்.

மேய்ப்பனின்
ஓய்வுப் பொழுதிலும்
மாடுகளை மேய்க்கின்றன
கவனமாய் கொக்குகள்.
புல்வெளி முழுதும்
வயல் வரம்பிலும்
ஓய்ந்தறியாமல்.
சால் நடக்கும்
காளைகளை உரப்பும்
உழவனின் குரலுக்கு
முன்னாலும் பின்னாலும்
அவனையும் கவனமாய் விரட்டுவன
கொக்குகள்தான்.

"தண்ணீரில் நின்றால்
காய்ச்சல் வரும்"என
நீர் விளையாடும்
சிறுவனுக்குச் சொல்ல முடியவில்லை.
"கொக்குக்கு ஏன் காய்ச்சல்
வருவதில்லை ?.. "
பதில் வினா
இருக்கத்தானே செய்கிறது...??

எவ்வளவு நவீனங்கள்
எத்தனை வசதிகள்..???
பாரம்பரியம் பேணுவதில்
உரங்கொண்டு
ஒற்றைக் காலில் நின்று
இயற்கைக்குச் சேதமேயில்லாமல்
ஒவ்வொன்றாய் மீன் பிடித்து... ... ...

கொக்குகளைப் பற்றி
வேலை ஒதுக்கி
ஆறஅமர்ந்திருந்து
ஆராய முடிகிறதா நண்பா?
உனக்குச் சிரிப்பு வருகிறதா?

02-02-2011

கை. சரவணன்

எங்கள் அழகிய தெருக்கள்

எங்கள் வீதிகள் அழகானவை.
மிகமிக அழகானவை.
முழு நீளமும்
சந்திகளும் சந்துகளும்கூட
பாதுகாப்பானவை.
மிகமிக
பாதுகாக்கப்படுவன.

அந்த வீதியிலுள்ள
ஒரு வீடு–
பாட்டியால் அம்மாவுக்கு
அவள் பாட்டியிடமிருந்து
பெற்று வழங்கப்பட்டிருந்தது.
வேலிக்குள்ளிருந்த ஆழக்கிணற்றுக்கும்
ஆழத்திலுள்ள மண்ணிலிருந்து
மூதாதையின் வியர்வை
இன்னமும் மணக்கிறது.

வீட்டிலிருந்து
வீதிக்கு வருகையில்
என்னை நானே
நிரூபித்தாக வேண்டியிருக்கிறது.
எனது,
எங்களது
வீதியினது பாதுகாப்புக்கு
இது அவசியமாகிறது.

வீதியின் பாதுகாப்பு
வீடுகளையும்
கிராமங்களையும்
நகரங்களையும் நாட்டையும்
பாதுகாக்கிறது.
அச்சுறுத்தல்களற்ற
அழகிய நாட்டின்
மேலதிக தேவையான
பாதுகாப்புப் பற்றி
யாருமே.....
யாருமே ஐயுறத்தேவையில்லை.

இருள்படர்ந்த பின்னாலே
பலபேர்கள்
பெரிய பெரிய ஆயதங்களுடன்
கதவுகளைத்தட்டியும்
இடித்தும் திறப்பர்.
இருப்பதையெல்லாம்
எடுத்து பின்னர்
வசதியாகவும் ஆறுதலாகவும்
அப்பாலே செல்வர்.
பாதுகாப்பின் மகிமைக்கு
இது போதும்.

மூதாட்டியின் தனிமை
முடிவுக்கு வரலாம்,
யுவதிகளின் களங்கமற்ற காத்திருப்புகள்
முடிவுறுத்தப்படலாம்.

கை. சரவணன்

எங்கும் நாய்கள் எதுவிதமான
தடைகளுமின்றி
இரவு முழுவதையும்
குரைத்தபடி கரைக்கலாம்.

எங்கள் வீதிகள்
எதுவித நிபந்தனைகளுமற்று
முழுநாளும்
பாதுகாக்கப்படுகின்றன.

சந்ததி நீளமும்
வாழ்ந்த வீட்டின்
தெருவின் முனையிலும்,
இடையிலும்,
நெடுகிலும்,
என்னைப் பிரகடனம் செய்தபடி
பாதுகாப்பாக உலவிவர
முடிகிறது
பெரும் பாக்கியமல்லவா.

24.03.2011
09:00 பி.ப

நன்னாட்டுச் சிறப்பு

நல்ல நாடொன்றினது
அத்தனை அம்சங்களுமுள்ளதான
எனது நாடு பற்றி
நீங்கள் பொறாமையுறலாம்.

தொலைக்காட்சித் தொடரில்
வீட்டால் விரட்டப்பட்ட குடும்பத்திற்காய்
க(ந)ரைந்து போன வயதில்
கண்ணீர் சிந்த முடிகிறது.
உயரிய பாதுகாப்புள் இருக்கிற
வீட்டைச் சீதனத்தில் ஏற்கமறுக்கிற
உரித்துடையளாகிய
முதுகன்னி.

பயங்கரவாதமற்ற,
வறுமைஇல்லாதொழிக்கப்பட்டபின்
இரவுகளைக் காவலிட்டபின்னும்
வீடுகளைக் களவாடும்

கை. சரவணன்

கொள்ளையர்கள்.
பலவாரங்களின் முன்பாக
காணாமல் போய்விட்ட
காவலர்களை
பலமைல்களுக்கு அப்பாலுள்ள
சந்தடிமிக்க தெருவில்
மடியில் தட்டி,
பறியில் கைவிட்டுத் தேடும்
காவலர்கள்.

பாடசாலைகளில்
ஓய்வெடுத்துத் தயார்செய்து
தனியார் கல்வியில் கண்ணாயிருக்க
போதிய அவகாசங்களிருப்பதாக
சலித்துக்கொள்ளும்
ஆசிரியர்கள்.

ஆலயங்கள் மிகுந்திருப்பதால்
பருவ உற்சவங்கள் கூடியதால்
ஒலிபெருக்கி
பக்தியைப் பலவந்தமாக்கி
காதுகளில் ஊற்றி உறைய விட
மண்டை விறைக்கிறதாக
கணக்கேடுகளில் காணாத
கணக்குகளுக்காக
தர்மகர்த்தாக்களுக்கும்
தலை விறைக்கும்.
எதுவும் தெரியாது போகும்.

பருவப்பெண்களினைப்
பெற்றுப் பராமரிப்பதில்–
ஆடைகளின் ஒதுக்கீட்டிற்காய்
தலையிலடிக்கும் அப்பாக்களுக்கு
துணி குறைகிற அளவிற்கு
விலை குறையாதது
புதிர்தான்.

ஆறு மாதத்தில் காய்க்கிற
தென்னைக்கும்
மூன்று மாதத்தில் குஞ்சு பொரிக்கிற
கோழிக்கும்
ஒரேயொரு பூப்பூக்கிற றோசாவுக்கும்
வரிசை நீளாமலா இருக்கும்..?

நல்ல நாட்டின்
பொழுதுகள் பயனுறப் போவதற்கு
இனித் தடையென்ன???

20.04.2011
மாலை 6.00

கை. சரவணன்

கழுதைக் கச்சேரி

களைகட்டியது
கழுதையின் கச்சேரி.
காற்றுவெளி சதிராட
கானம் நிறைந்திருந்தது
அவ்வெளியை நீக்கமற.

கழுதைகள்
சுற்றித் திரிவனவென்றும்
பொதி சுமக்கவே உதவுமென்றும்
படினப்பட்ட மனதுகளுக்காக
நானும்
அனுதாபங்களைச் சொல்லமுடிகிறது.
இதை வெறும்
அபத்தமென நீ சொல்லமுடிகிறதா?
நல்லது.

காற்று வெளியை நிறைத்த
கழுதைகளின் பாடலின் சுருதி
உனக்கும் புரியாமலிருக்கலாம்.
தாளம் பற்றிய அறிவும்
மனதிலுறைந்த படிமங்களும்
இரசிப்பதையும்
இலயித்துப் போவதையும்
தடை செய்யலாமென்ற
ஆலோசனையை
நீ
நிராகரித்து விட முடியாது.

சாரிசாரியாகவும்
நீளமைதியிலுறைந்தும்
போயிருந்து
ஓணான்கள் தலையாட்டுவதை
நீ ஒரு போதாவது
மனம் திறந்து
பார்த்திருக்கிறாயா?

திரள் திரளாய்
தரையைத் தாவிக்கடந்தும்
நீரை நுழைத்துக்குடைந்தும்
வந்திருக்கும்
ஈரூடகத் தவளைகளின்
கோசம்
உன் காதுகளில்
அதிரவில்லையா??

காற்றதிரும் பொழுதுகளை
சங்கீதமென
வரையறுத்த விஞ்ஞானம்
உனக்கு எட்டாததல்ல.

இருந்தும்
களை கட்டும்
கழுதைகளின் கச்சேரிகளை
உன்னால்
இரசிக்க முடியாமைபற்றியோ
ஆமோதிக்க முடியாமைபற்றியோ
கழுதையாகலாம்
ஓணானோ தவளையோ
ஏன்
நானேயாயினும்
ஏதும் விமர்சிக்கப் போவதில்லை.

30.04.2011
இரவு 09.30.

கை. சரவணன்

நாட்குறிப்பு

கடலை வறுக்கும்
காற்றும் சூரியனுமாய்
கூட்டிணைந்து.
சம்மந்தமேதுமே
தனக்கில்லையென
தலை திருப்பி நிற்கிறது
தலை வாராத் தென்னை.

கடல்–
ஆத்திரம் மேலிடமேலிட
கொதித்துப் போகிறது.
என்றாலும்
ஏதும் செய்து கொள்ள
முடியவுமில்லை
முயலவுமில்லை...

கடலோரம்
அடம்பன்கொடியும்
இராவணன் மீசையும்
வறுபட்டுப் பொசுங்கிப்போகின்றன.

அடிவேருக்குள்
புழுங்கி வியர்க்கிற நண்டு
நிலவில் வந்து
காற்று வாங்குகிறது.

சூரியனை விழவிட்டுவிட்ட
காற்று
அமைதியடைந்து குளிர்கிறது.
கடலின் கொதிப்பும்
கோபக்கூச்சலிடலும்
நிலவை உடைப்பதைக்
குறியாக்குகின்றது.

எட்டத்து நிலவு
தொட்டுக் கடல் பிடித்தாலுமென
முகிலுக்குள் மறைகிறது.
இரவு முழுதையும்
மாறிமாறிக் கடத்தி
காலையில் தலை மறைகிறது.

மறையும் திசையறிய
உளவறியும் விடிவெள்ளி,
சூரியனின் சூட்டிற்குள்
மறைகிறது.

நிலவைக் காணாத
அமாவாசையில்
ஆறிக் கிடக்கிறது கடல்
நட்சத்திரங்களுடன்
சல்லாபித்தபடி.

14.05.2011
மு.ப.08.00

கை. சரவணன்

உயிர்ச் சத்திரம்

அழகாக எக்காளமிட
திறந்த வாயின் வேட்டைப்பற்களில்
பட்டுக்குஞ்சம்.
இருந்தென்ன?
பல்லீறுகளிலிருந்த குருதியின் கறை
எட்டிப்பார்த்தது.
பார்வையிலிருந்து குதித்து
உயிர்த்தன செய்திகள்.
காற்று அப்பல்லீறுகளை
மோந்துவிட்டு
சகோதர இனம் மணக்கிறதாக
சலனமேதுமற்றிருந்த
மரத்தினிலைகளுக்கு சொல்லிற்றாம்.

முகத்தை வெளிச்சமிட
வெளிச்சமிட
கறைகள் ஒளிர்ந்தன.
கறைகளில் இனத்துவவேறுபாடுகள்
காணமுடியாதிருக்கிறதென்றும்
தெளிவாகத் தெரிகின்றதென்றும்
வாதப் பிரதிவாதங்கள்
இல்லாமலா இருக்கும்?

வாதப் பிரதிவாதங்கள் கூடான
ஒரு பொழுதில்
சோதர இனத்தின் உறைந்தகுருதி பற்றிய
மறுவிசாரணைக் காற்றெழுந்து
உயரழுத்த மண்டலமாகி
பொழியத் தயாரான பொழுதில்
பசித்திருந்த சீருடைகளின்
கருவிகள் கூடி
அவசரத்தில் குருதிகுடித்து
உடலை வீசியெறிந்தன.

சீருடைகளின் ஊருக்குள்
உறவுக்குள் வீழ்ந்திருந்த
உடலத்தைச் சூழவும்
காற்றதிர்த்த அழுகையோலம்
வானைத் தொடுகிறது.

பசித்திருந்தோர்
தாகத்துடனிருந்தோர்
பசியாறி– தாகம் தணிக்க
ஒரு இடம்
தேவையில்லையா?

03.06.2011

கை. சரவணன்

நினைவுக்கருக்கு

என் மனது
மரத்துப் போனதாக
உனது சுட்டு விரலுக்கு
யார் சொன்னது?

கருகிழிந்துதொழுகிய உயிரும்
சருகாகிச் சுருண்டு
இற்றுவிழத்தயாராயிருந்த உயிரும்
எல்லாமாயும்
கூட்டிக் குவித்து
அள்ளிப்புதைத்ததால்
மனது மரத்திருக்கும் என உனக்கு
முன்மொழிந்தவர் யார்?

ஒதுங்கவொரு மர நிழலுமில்லை.
கருகிய அடிக்கட்டைதானுமில்லை..
புரிகிறதா?
ஆடை அம்மணம் மறைக்கிறது.
அரை வயிறாயினும் ஒருவேளை நனைகிறது.
ஆறுதல்பட வேறேதுமில்லை.

குறைக்காலில் புதிதாய்த் துளிர்த்தகட்டை....
அந்தரத்தில் முடியும் கைகள்....
குழியாகிப்போன கண்கள்....
இன்னுமின்னும் ஏராளம்.

"மரத்துப் போயிற்றுன் மனது"
மூன்று சொல்லில் முடிக்கும் திறமை
இன்னும் உன்கூட இருக்கிறது.
"நம்பிக்கை இல்லை" என
இரட்டைச் சொல்லில்
அன்றே முன்மொழிந்ததாய்
பெருமைப்பட முடிகிறது உனக்கு.
"அகதி" எனும்
ஒற்றைச் சொல்லின் அர்த்தம்
இன்னும் உனக்கேன்
புரியவில்லை???

10.06.2011
08.00 பி.ப.

கை. சரவணன்

அலுத்து வடியும் மனசு.

வீதி நெடுகும்
ஓரங்கள் எல்லாம்
நெளிந்துகொண்டும் கடிபட்டும்
பிணைந்தும் கொண்டிருந்தன
புன்னகையும் அழுகையும்.

பொறுக்கியெடுத்து அவற்றை
தூசிதட்டி அணிந்து கொள்ள
முடியுமென காகம் கரைகிறது.
வேலி ஓணான் ஆமோதிக்கிறது.

புதிதாய்ப் புனைந்த ஏதேனுமொன்றை
புனைந்து கொள்ள முடியுமாயினும்
முனையாத மனசு
புரண்டு படுக்கிறது
தலையை வியர்வை நனைக்க.

கையை எடுத்தசைக்க
அலுப்பாயிருக்கிறது
மயங்கி விழுகிறது வயிறுமூட்டிய
நுளம்பு.
நாய்கள் பகலையும்
குரைத்துத் துரத்துகின்றன
இரவுகளைப் போலவே பிசகாமல்.

மலிவுச் சாமான் வண்டி
முனகியபடி போகிறது
கோயில் ஒலிபெருக்கியால்
விழுங்க முடியாத அறிவித்தலோடு.

எங்கிருந்து வருகிறது
எவ்வளவு தூங்கினாலும்
வற்றாத தூக்கமும்
வரண்டே போகாத சோம்பலும்.

வீதியோரம் உதிர்ந்தவையை
தூசிதட்டிப் புதுக்குவதாயும் இல்லை
புதிதாயேதும் பண்ணி அணிவதாயுமில்லை.
பின் எதுதான் நடக்கிறது???

28.06.2011.

கை. சரவணன்

எனது சாக் குறிப்பு

பத்துத் தடவைகளுக்கும்
மேலாகத் தேடிவந்த சாவு
மூக்கருகே தன்
நாற்றத்தை விட்டிருக்கிறது.

வந்துபோன அத்தனை முறையும்
வாங்கிக் கட்டியிருக்கும் முறையாக
விட்டுப் போனதற்காய்.

கண்மண் தெரியாமல்
வாரிக் கூட்டி அள்ளிப்போன
காலங்களில்தான்
அதிகம்முறை
வந்திருக்கிறது.
முன்னொரு சில முறையும்
பின் ஒரு சில முறையுமாக
வந்திருக்கிறது
நானறிந்து கொண்டபடியாக.

தலைமாட்டிலிருந்துகொண்டு
தலையிலிருந்த பேனைக்
கொண்டு போயிருக்கிறது.
கால் விரலிடுக்கிலிருந்து
உடலினெஞ்சியிருந்த குருதியில்
பங்குபோட்ட சருகுண்ணியைக்
காவிப்போயிருக்கிறது.

முதுகுச் சட்டையில் ஓடித்திரிந்த
முசுறு செத்திருக்கிறது.
மூக்கின் கீழிருந்த மீசைமயிர்
கரிந்திருக்கிறது
மூக்குக்குக் கொஞ்சமும் சேதமில்லாமல்.

உன்னால்
இதையெல்லாம் நம்பவே முடியாது
என்னாலேயே முடியாதபோது.
கண்கள் வெளித்தள்ளி
குருதியெல்லாம் கூடி இதயத்துள்
உறைந்து போயிருந்த நாட்களில் நாவும் உலர்ந்து
அண்ணத்தில்
ஒட்டியிருந்தது.

பிணங்களைச் சூழவும் பரத்தி
அதற்குள்ளாக நடுவிலிருந்து
எத்தனை வெடியதிர்வுகளைத்தான்
கணக்கெடுக்க முடியும்?
குறித்துக் கொள்ளவே முடியாத
வேதனைக் குறிப்புகள்
வீதியோரம், கடலோரம்,
விடத்தல் முட்பற்றைகள் என
எங்கும் விரவிக் கிடக்க
உயிர் எஞ்சியிருக்கிறது
சேதப்படாமல்.

முன்னரே கூறியபடி
பத்துத் தடவைகளுக்கும் மேலாக
தேடிவந்து
திரும்பிப் போயிருக்கிறது
எனது சாவு
வெறுங்கையோடு.

29.06.2011
07.00 பி.ப.

கை. சரவணன்

மண்புழு பாம்புச் சமன்பாடு

எனதேயான
எனதூரில் எல்லாம்
விண்முட்டும் மாடங்களுடன்
மண்புழுக்கள் கோயில் கொண்டிருந்தன.

மண்புழுக்கள் மீதான
பெரும் பெரும் ஐயங்களின்மீது
நம்பிக்கைகள் குடியிருக்கின்ற போது
நாங்கள் வாழ்ந்திருந்தோம்.

மண்ணில் குழியெடுக்கும் பொழுதுகளில்
மண்வெட்டியால் துண்டிக்கப்பட்ட
மண்புழுக்களிடம் மன்றாடி
மன்னிக்க வேண்டி
தங்க மண்வெட்டிகளை
நேர்த்தி வைத்தளித்தோம்.
மழைநீர் முட்டியபோதும்

வாரடித்து மண்கழுவி நீர்
வடிந்தோடிய பின்னும்
மண்புழுக்கள் வெளியே ஊரும்.
கோழிகள் அவற்றை விழுங்குமென
அச்சம் கொண்டு
கோழிகளை அடைத்து விடுவோம்.
அந்நாட்களில் கோழிகளால்
கூடுகள் நாற்றமெடுக்கும்.

உங்கள் ஊரில்
மண்புழுக்களுக்கு மதிப்பேயில்லை.
பாம்புகளுக்குப் பால் வைத்து
கோயில்களில் வழிபாடு நடக்கிறது.

நாங்கள்
விருந்துண்ணும் மேசையில்
சுருட்டியோ நீட்டாயோ
பொரித்துவைத்த பாம்பு
அவசியமானது.

29.06.2011
05.00பி.ப.

கை. சரவணன்

ஆடு மேயும் எனது கல்லறை!

எனது கல்லறையை
ஆடு மேய்ந்து கொண்டிருந்தது.
நான் புதையுண்டு
காலங்கள் பலவாகிப் போயிருக்கிறது.
பிற கல்லறைகள் சிலவற்றோடு
எனது கல்லறையையும்
ஆடு மேய்ந்து கொண்டிருக்கிறது.

புதைத்துச் சில மாதங்களில்
கட்டத் தொடங்கினர்.
முதலாவது ஆண்டு நிறையச்
சில நாளிருந்தபோது
இரவிரவாய் மீதியை முடித்து
ஈரம் காயாமலேயே
தீந்தை தடவினர்.
அப்போது அயலில் கூட
புல் செடிகளிருக்கவில்லை.
அண்டை அயலில் சில
கல்லறைகளில்
புல் செடியாகி மலர்ந்துமிருந்தது.

அடுத்தடுத்து வந்த
சில ஆண்டுகளில்
நினைவு நாளுக்கு முந்தியநாட்களில்
புல் வழித்துப் போயினர்.
பின்னர் அதுவும்
அன்றைய நாட்கடமையாகி
அதுவும் பின்னர் நின்று போயிற்று.

உறவினர் முகங்கள்
மறந்து மங்கிப் போயிற்று
என் கல்லறையின் தீந்தையாய்.....
நினைவுகளின் விரிசல்
கட்டுக்களில் வெடிப்பாய்.....

எனது கல்லறையை
எப்போதாவது நாய் கழுவுவதுண்டு.
எனினும்
இப்போது
ஆடு மேய்ந்துகொண்டிருக்கிறது.

18.07.2011.
10.30 மு.ப.

கை. சரவணன்

அசையாப் பொழுது

பொழுது முழுதையும்
விழுங்கியிருக்கிறது
சோம்பல்.
கக்க முடியாத சோம்பல்
ஓய்வாய் ஆறியிருக்கவும் முடியாது
சோம்பிக் கிடக்கிறது.

பாயின் பின்னல்களை
முகமும் பதிவிட்டிருக்கிறது.
வயிறு முட்ட
வியர்வையைக் குடித்த போர்வை
சிறுநீர் விட்டதோ என்னவோ?
கடுமையாக நாறுகிறது படுக்கை.

இலையான் வந்திருந்து
முகர்ந்து விட்டுப் போகிறது
பெருத்த ஏமாற்றத்துடன்
உயிரினிருப்பைத் தூசித்தபடி.
விழுங்கப்பட்ட பொழுதுக்கு
விடுதலை எப்போது?

உறைந்து கிடக்கிறது
கீழைவானத்துச் செம்மையோடு.
அசைய மறுத்த முகில்களை
பறவைகளின் பாடலால்
நகர்த்த முடியவில்லை.
விறைத்து நிற்கிற மரங்களில்
உறைந்துள்ள இலைகளை
உலுப்பி விட முடியவில்லை.

அசைய மறுக்கிற வெளுப்பு
முற்றத்தில் கொட்டுப்பட்டு
சிந்திக் கிடக்கிறது.

பாயின் பின்னலிழைக் கோலத்தை
முகம் பிரதியெடுத்து வைத்து
சரவை பார்க்கிறது.

19.07.2011
09.00 மு.ப.

கை. சரவணன்

காலக்குதிப்பு

அதிகாலை துயின்றிருந்த
மென்காற்றை
உதைத்து உலுப்பி எழுப்புகிறது
பள்ளியெழுச்சிப் பாடல்.
மென்மையிழந்து
காலவேகத்தில் குத்திப்பாடுகிறது.
திடுக்கிட்டு விழித்த காற்றை
உலுப்பிவிரட்டுகிறது.
சோம்பல் கூட முறிக்க அவகாசமற்று
அந்தரித்தோடுகிறது காலையிழங்காற்று.
படுக்கைப் பாயெழுந்து
பாடலுக்குக் குதியாட்டம் போடுகிறது.

சும்மா கொஞ்சநேரம்
ஆறியிருக்கவும் விடாமல்
சுப்பிரபாதமும் அரையாடை
அவிழும்படி அதிர்கிறது.
இரவுக் குதியாட்ட அலறல் சாமங்கடந்தும்
ஓலமிடுவதாக புலம்புகிற பழசுக்கு
விடிந்தது தெரியாது போலிருக்கிறது.

பழரசமாயிருக்க வேண்டிய
பக்திப் பாமாலை
மதுசாரம் போலிருப்பதான
சுரணையுள்ள பக்தனின் கண்டுபிடிப்பு
சிரிப்பாயிருக்கிறது.
வேகங்கொண்டு பாடல்கள்
வீச்சாயிருக்கின்றன.

காற்று–
தலையைப் பிய்த்தபடி ஓடுகிறது.
ஊருக்கு அப்பாலே
வயல்வெளி...பனங்கூடல்....
பொட்டல்தரவை....
எங்குமாக ஓடியலைந்து
ஒளிக்க ஒரு இடமுமின்றி
தவித்துப் போகிறது காற்று.

உலகு வேகமாகிவிட்டது.
கழிப்பறையிலேயே சவரம்
குளிக்கும் போதே துவையல்
உடைமாற்றமும் சாப்பாடும் ஒன்றேயாகி
வேகமாகப் போகிறது வாழ்வு.
தூக்கம் மட்டும் தனித்து நடக்கிறது
ஆறுதல்தானே.

சாவுவீட்டு ஒப்பாரிகள்
நீளமாகி அறுக்கிறது.
மரபு மாறாமலே ஓலமிடுகிறது.
எஞ்சியிருக்கும் ஒன்றிரண்டு
ஒப்புச் சொல்லியழ முடிந்த
கிழவிகளுக்கு
துள்ளியோடும் மெட்டில்
ஒப்பாரிசொல்லி
மாரடித்துக்குதிக்க
பயிற்சி வழங்க
யாராகிலும்
புதிய சிந்தனையாளிகள்
வருவார்களா???

25.08.2011.
10.00 மு.ப.

கை. சரவணன்

இருளர்களின் கதை..

ஊர் முழுதும் நிரம்பலாகி
நாடெங்கும் காற்றோடு கலந்து
கிறீசுமனிதக் காற்று வீசுகிறது.
உங்களுக்கும் இது
தெரியும் தானே!

அச்சப்பட்ட இரவுகளை
அள்ளியள்ளி
எங்கும் அப்பியவன்.
பணமேதும் பெறாமலேயே
இதையிதைச் செய்கிறான்
ஒரு சேவையாக.

அச்சப்பட்ட இரவுகளில்
அரவமேயில்லாமல்
உலவுகிறதாகவே ஊரெல்லாம்
கதை கதையாய்
கதைக்கிறது.
இல்லையெனவும் உரத்துச்
சொல்கிறார்கள்.
சட்டப்படியாக சரியாக
இல்லையென அடித்துரைக்கிறார்கள்
இன்னும் சிலர்.
எவ்வாறாயினும்
நீள இருளும் இரவுகள்
அச்சத்தை எல்லாத் தெருக்களிலும்
ஊரிலுள்ள எல்லா வீடுகளிலும்
வீசி விதைக்கின்றன.

நீண்ட இரவுகளில்
தனித்து உலவும் மர்மம்
நீடித்துப் போகிறது.
நிம்மதியைப் பறித்து
சுவைத்தபடியே ஆறுதலாக
அது போகிறது.

மர்மம் மணக்கிற
குடியிருப்புகளிலிருந்து கிளம்புகிற
கூக்குரலையும்
கிளரும் மணத்தையும்
உடனுணரும் வலுவை
இரும்புகள் கொண்டிருப்பதாகவும்
இரும்புகள் பற்றிய கரங்களை
உடைகளோடும் இல்லாமலும்
கணப்பொழுதுக்குள்
இட்டுவருவதாகவும்
எல்லா இடங்களிலுமுள்ள
எல்லோரும் கூறுகிறார்கள்.
மேலும்–
அச்சத்தைத் துரத்தியவர்களை
அவை அடித்ததாயும்
உதைத்ததாயும் பிடித்ததாயும்
கூறுகிறார்கள்.

ஒன்றிரண்டு
பைத்தியங்களால் வந்த வினை.
ஊரை முழுதுமாக
பைத்தியங்களே சுற்றிவந்து
ஊரைப் பைத்தியமாக்குகிறதாக
சட்டம் பேசுகிறது
ஆறுதல்தானே.....!

கை. சரவணன்

இரவுகள்
அனேகமாக அடங்கிப்போவது
தெருச்சோலிகளைக் குறைத்திருக்கிறது.

இனங்களை
சமூகங்களை ஒன்றாக்கி
இறுகப் பிணைத்திருக்கிறது.
சமயங்களை ஒன்றாக்கும் வலுவை
ஆண்டவனிடம் யாசிப்போம்.

இதையிதை விடவும்
ஆள்அளவிற்கும் அப்பாலே
அகல வாய் திறந்து அழுது அடம்பண்ணும்
குழந்தைகளிடத்தில்
அதட்டாமலேயே வாயை
படக்கென மூடச்செய்கிறதாகவும்
கூறுகின்றனர்.
அடங்கும் குழந்தைகளின்
கபாலங்கள் கண்களைப்
புறந்தள்ளுவதுதான் பார்க்கச்
சகிக்கவில்லை.

சிறுவர்களை முன்னர்
காலங்காலமாய் இதைப்
பற்றிக் கூறியே
சமாளிக்க வேண்டியிருந்தது.
அதைக் காட்டுமாறு
அதற்காகவே அடம்பிடித்த
சில சிறிசுகளை இப்போ
சமாளிக்கமுடிகிறது
ஆறுதல்தானே???

04.09.2011.
7.30.பி.ப.

வானம் விழுந்த நெல்வயல்

வயலுக்குள்
வானம் விழுந்து கிடந்தது.

விழுந்திருந்த வானத்தில்
புல்– நெல் எல்லாம்
முளைத்திருந்தன.
தவளைகளிருந்தன.

வானத்தில் ஒட்டிய படியே
இரவு கைவிட்ட
குறைநிலவும்
விழுந்து கிடந்தது.
நட்சத்திரங்களைக் காணவில்லை.
சிறிசுகள்தானே கரைந்திருக்குமென
ஐந்தே வயதான மகன்
ஆறுதல் சொன்னான்.
இருக்கலாமென ஆமோதிப்பதை
வயலின் மினுமினுப்பு உறுதிசெய்தது.

கை. சரவணன்

புல்லிலும் நெல்லிலும்
தடக்குறாது ஓட
முகில்களுக்குப் பாடம்
சொல்லித் தந்தவர் யார்?

வயலின் புல்...நெல்
ஊடாகச் சூரியனும்
சிவந்தபடியே முளைக்கிறது.
தவளையின் கால்களுக்குள் அசைகிறது.

நிற்கிற கொக்கு
பறக்கிற மாயையை
முகில்களின் விரைவு காவிவருகிறது.

உங்களூர்
வயலிலும் தேடிப்பாருங்கள்
திசைதப்பிய வானம்
விழுந்து கிடக்கலாம்
வெள்ளம் வடிந்து வற்றுமுன்.

29.11.2011.
09.55 இரவு.

என் சிதையின் குறிப்புகள்.

தீ
மெல்லச் சுவைக்கத் தொடங்கவும்
சூடுபரவும் இப்பொழுதிலும்
கடந்து போன
எனது
இறுதி நிகழ்வுகளை
நினைக்க முடிகிறது.
தீயின் செந்நாவுகளை விடவும்
சூடாக இருக்கிறது.

செத்து விழுந்து கிடந்தபோது
குருதியும் உறையாது ஈரமான
முகத்தைப் பார்த்தபின்
அடையாளம் தெரியவில்லை என்றும்
யாராயிருக்கும்
எதுக்காகவாயிருக்கும் என்றும்
அடுக்கடுக்கான கேள்விகளுடன்
அவசரப்பட்டுக் கடந்து போயினர்.

ஒன்றிரண்டு பேரே
வீடு வந்தழுததாயும்
மிகச் சிலரே வந்து
பந்தல் வெறுமையுறாது காத்ததாயும்
நினைவு மீண்டது.

கை. சரவணன்

மேலும்
அஞ்சலியுரைக்க அழைத்தபோது
தம்ஆயுளுக்குள் முதல்முறையாய்
பேசமறுத்த பேச்சாளரையும்
அஞ்சலிப் பா வழங்கியே பெருமைப்பட்டவர்
கைபிசைந்து நின்றதையும்
காவிகள்தவிர்ந்த ஏனையோர்
சுடலைக்கு விரைவதாய்
அப்படியே வீட்டுக்குப் போனதையும்
மீட்ட முடிகிறது.

சாவுக்கு வர்ணம் தீட்ட
முடிந்திருக்கிறது.
எனது சாவின் நிறம்
ஆட்சிக்கோ..... அதிகாரத்துக்கோ
அனேகமாய் ஒத்துவராதவை.
தொற்றையேற்படுத்தி
உயிர் பறிப்பதாயுமிருக்கலாம்.

பங்குகொள்வதிலுள்ள
பயம் அதுவாயிருக்கலாம்.
எனினும்
தீயிற்கு மட்டும் பயமேயில்லை.
ஆரத்தழுவுகிறது.
அது ஒன்றே
ஆறுதலாயிருக்கிறது.

06.03.2012.
10.20 காலை.

சில பகிர்வுகள்.....

"அண்மையில் மரண வீட்டிற்குச் சென்றுவந்த நினைவுகளுடன் இணைய உங்கள் கவிதை புதுப்புது அர்த்தங்களை விதைத்தது. "..... பந்தல் வெறுமையுறாது காத்ததாயும்..." மனத்தில் நிறைந்து நிற்கிறது.

Dr. M.K. முருகானந்தன்
(என் சிதையின் குறிப்புகள்)

"நீயோ நானோ
இருந்த சுவடுபற்றி
யாரும் கவலையுறப் போவதில்லை"
வித்தியாசமான வடிவமுறை வாழ்த்துக்கள்

பா. சுஜந்தன்
(வாழ்வின் குறிப்புகள்)

இந்தக் கவிதையின் ஒருவரி என்னை எங்கோ கொண்டு சென்றுவிட்டது
"என்னை நானே நிரூபித்தாக வேண்டி யிருக்கிறது"

மெலிஞ்சி முத்தன்
(எங்கள் அழகிய தெருக்கள்)

"கவிதையின் நீளத்தை விட உண்மையின் ஆழம் அடக்கமாக வாசிக்கப்பட்டிருக்கிறது."

நாகலிங்கம் திலீபன்
(எங்கள் அழகிய தெருக்கள்)

கை. சரவணன்

கை. சரவணன்...

90களின் பின்னரைக் கூறுகளிலிருந்து முனைப்புடன் எழுதிவரும் இவர் அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் சித்தன்கேணியை வாழ்விடமாகவும் கொண்ட ஆசிரியராவார்.

பொதுப் பணிகளில் அளவற்ற ஈடுபாடுடைய இவர் கவிதை, உருவகம், பேச்சு என்பவற்றிற்கூடாக அறியப்பட்டவர். சிறுகதை, நாடகம், புகைப்படம் ஆகிய துறைகளில் ஈடுபாடும் ஓவியம், குறும்படத் துறைகளில் ஆர்வமும் உடையவர். மக்கள் வாழ்வியலும் இயற்கையுமே இவரது படைப்புகளின் உயிர்நாடி.

கை. சரவணன், கைசன் ஆகிய பெயர்களில் எழுதிவருபவர்.

"எழு சிறுகதைகள்" (2000) தொகுப்பில் இவரது "போதனை" எனும் பரிசுச் சிறுகதையும் இடம்பெற்றுள்ளது.

"எனது மிதிவண்டிக்காலம்" எனும் 60 தேர்ந்த கவிதைகளுடன் அச்சுக்குத் தயார் நிலையிலிருந்து இவரது கவிதைத் தொகுதியும் 2009 யுத்தத்தினால் விழுங்கப்பட்டுவிட்டது.

கை.சரவணன் தொண்ணூறுகளின் பிற்பகுதியில் எழுதத்தொடங்கியவர். "வானம் விழுந்த நெல்வயல்" இவரது முதலாவது தொகுதியாகும். இவரது கவிதைகள் காலத்தின் இயக்கத்தினையும் அதன் நிலைப் புள்ளியறுந்த மனத்தையும் பாடு பொருளாகக் கொண்டவை.

போர் மறைத்துப்போன சாதாரண மனிதர்களின் மறைப்பேதுமற்ற வாழ்க்கையும், சமூக அசைவியக்கத்தின் காட்சிகளும், அது தொடர்பான சமூக விமர்சனங்களுமே கை.சரவணனுடைய கவிதைகளின் சிறப்பு.

இயற்கையின் கூறுகள் மிக நுண்மையாக கை.சரவணனின் நினைவுகளை ஆக்கிரமித்துள்ளன. இயற்கையும், மனித அவலமும் இவருக்கு சமகால நினைவுப் பயணிகள்.

ஓர் அனுபவத்தை சகமனதுடன் பகிர்ந்து கொள்ளும் கவிதைகள் இவருடையவை. போருக்குப் பின்னான படைப்புக்களில் தனிக் கவனத்தை கோரும் படைப்பாக இது அமையும்.

ந.மயூரரூபன்